9. அறிவிப்பு

தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2005). மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2005)[@] ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஹேமச்சந்திரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவுக்கு அடிப்படையாக இருக்கிற அறிவிப்பு இங்கே வந்த நேரத்தில் இதுசம்பந்தமாக மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியினுடைய சட்டப் பேரவை உறுப்பினர்கள் சில கருத்துகளை இங்கே எடுத்து வைத்தார்கள். இன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், அரசினுடைய கவனத்திற்கும் கொண்டு வர விரும்புவது இந்தச் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கோ அல்லது அரசு ஊழியர்களுக்கோ, மற்றுமுள்ளவர்களுக்கோ ஊதிய உயர்வு

@ 13-4-2005 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது